REPORTING SECTION
(Council)

தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

புதன்கிழமை, 1984 பிப்ரவரி 15.

மாசி 3, ருத்ரோத்காரி, திருவள்ளுவராண்டு—2015.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Providing Street Lights in V.O.C. Nagar (East), Pammal.

*11 Q. Thiru E. S. VENKATESAN (on behalf of Thiru S. Muthusamy): Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether any representation has been received during 1982 from Podu Nala Manram, V.O.C. Nagar (East) Pammal, requesting the Tamil Nadu Electricity Board, Pammal Branch Office, to provide street lights in V.O.C. Nagar (East);

(*b*) whether the Panchayat Office at Pammal has forwarded any proposal for the provision of street lights in V.O.C. Nagar (East), Pammal; and

(*c*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) பம்மல் நகரிய ஊராட்சி செயல் அலுவலரிடமிருந்து இதற்கான விண்ணப்பமும், தீர்மானமும் பெறப்பட்டபின் மேற்கொண்டு நடவடிக்கை மின்வாரியத்தால் எடுக்கப்படும்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதியிலே பாம்புகள் அதிகமாக நடமாடுகின்றன. அது மட்டுமல்ல. முகமூடி கொள்ளையர்கள் அட்டகாசமும், திருடர்கள் அட்டூழியமும் அதிகமாக இருக்கின்றன. ஆகவே மின்சார வாரியம் இதில் எவ்வளவு சீக்கிரம் நடவடிக்கை எடுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் நடவடிக்கை எடுத்தால் நல்லது. அப்படி நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, பாம்புகள் நடமாடுவதில்லை. ஊர்ந்து செல்வதாகத்தான் எனக்கு தெரிகிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : படம் எடுத்து வேண்டுமானால் ஆடும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : வேண்டுமானால், பாம்பு படம் எடுத்துத்தான் ஆடும், மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள் சொல்வது போல. இதிலே நகரிய ஊராட்சி, செயல் அலுவலரிடமிருந்து தீர்மானம் போடப்பட்டு வரவேண்டியுள்ளது. அது சம்பந்தமாக உதவிப் பொறியாளர் அந்த அலுவலகத்திடத்திலே கேட்டுக் கொண்டுள்ளார். அவர்கள் தீர்மானம் போட்டு அனுப்பாததனால், மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப் படாமல் இருக்கிறது.

டாக்டர் இரா. சனார்த்தனம் : முகமூடிக் கொள்ளையர்கள் விளக்குகளை உடைத்து விடுகின்றார்கள் என்று சொல்கின்றார்கள். தெரு விளக்குகள் ஆங்காங்கு அணைக்கிறபோது, தனிப் பிரிவினர் மூலம் உடனுக்குடன் பழுது பார்த்து எரிய வைக்கின்ற அளவுக்கு மின்சார வாரியம் நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அதற்கான வாய்ப்புகள் ஏற்கெனவே இருக்கின்றன. இதற்காக என்று தனிப் பிரிவு அவசியமில்லை. ஏற்கெனவே இருக்கின்ற பணியாளர்களே போதும்.

மின் விளக்குகள், குழல் விளக்குகள் தயாரித்தல்.

***12. வினா.—டாக்டர் இரா. சனார்த்தனம் மற்றும் திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம் —

(அ) தமிழ் நாடு மின்சார வாரியம் தனது பொறுப்பிலேயே மின் விளக்குகள் குழல் விளக்குகள், தயாரிக்கின்ற தொழிற்சாலைகளை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா ?